# கடிவாளம்

KADIVALAM

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் முழுநேர நான்காம் அணி மாணவர்களின் பயிற்சி இதழ்

கடிவாளம் 08 | வைகாசி 2011 | வள்ளுவர் ஆண்டு 2042

# மாணவர்களுக்கு ஊடக அறிவு அவசியம்

## முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை வேண்டுகோள்



இன்று பாடசாலைகளில் மாணவர்கட்கு ஊடாக அறிவானது அவசியமானதொன்றாகும். இது சம்பந்தமாக பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மைய பணிப்பளருமான பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை. பாடசாலைகளில் ஊடகக்கல்வி தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதுஇவ்வாறு தெரிவித்தார்.

யாழ் வேம்படி உயர்தர பாடசாலையில் யாழ்.கல்வி வலயப் பாடசாலை அதிபர்கட்கு நடைபெற்ற கருத்தரங்கில் பேராசிரியர் தொடர்ந்து பேசுகையில் எதிர்காலங்களில் ஊடகத்துறையில் நல்ல வேலை வாய்ப்பு காணப்படுகின்றது எனவும் அதில் போதியளவானோர் காணப் படவில்லை எனவும் குறிப்பிட்டார். அவர் யாழ். குடா நாட்டிலிருந்து உதயன் தினக்குரல் தினமுரசு ஆகிய பத்திரிக்கைகளும் குடாநாட்டு வாசகர்களை மையமாகக் கொண்டு தினகரன் யாழ். பதிப்பு வீரகேசரி யாழ்தீபம் போன்ற பத்திரிகைகளும் வெளிவருகின்றன.

இன்னும் அரச தனியார் வானொலி தொலைகாட்சி மற்றும் இணையதளங்கள் பலவும் இயங்கி கொண்டிருக்கின்றன. இன்று யாழ்ப்பாணத்தில் பயிற்சி பெற்ற தொழில் தராதரம் உள்ள ஊடகவியலாளர்களுக்கு பற்றாக் குறை நிலவுகிறது. எதிர்காலத்தில் ஊடகத்துறையில் காணப்படும் வெற்றிடத்தை நிரப்ப வேண்டும்.

எனவே குடாநாட்டு பாடசாலைகளில் பற்றாக்குறை நிலவுகிறது. எதிர்காலத்தில் ஊடகத்துறையில் காணப்படும் வெற்றிடத்தை நிரப்பல் வேண்டும்.

எனவே **குடாநாட்டு பாடசாலைகளில் உடனடியாக ஊடகக்கல்வியை ஆரம்பிக்க அதிபர்கள் முயற்சி எடுக்க வேண்டும்.**யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் ஊடகக் கல்வி பட்டப்படிப்புக்கு ஒரு பாடமாகப் போதிக்கப்படுகின்றது. கா.பொ.த உயர்தரத்தில் ஊடகக்கல்வியை பாடமாகஎடுப்பவர்கள் இலகுவாக பல்கலைக்கழக வாய்ப்பினை பெற்று கொள்ள முடியும்.

மேலும் இவர் குறிப்பிடும் போது பாடசாலைகளில் இதை போதிப்பதற்குபோதிய ஆசிரியர்கள் இன்மையால் ஏனைய பாட ஆசிரியர்கள் முன்வந்து ஊடகக் கல்வியைப் பயின்று மாணவர்கட்கு கற்பிக்க வேண்டும் சுயமாக முன் வருவோரை தேவையான வழிகள் ஆலோசனை செய்ய தாம் தயாராக உள்ளோம் என்றார்.

எல்லாப் பாடசாலைகளும் மாணவர்களை பத்திரிகை வாசிக்க தூண்டல் வானொலி கேட்டலஇ நிகழ்ச்சிகளில் பங்குபற்றல் என்பவற்றுக்கும் ஊக்கப்படுத்த வேண்டும் எனவும் கூறினார்.

# யப்பானிய உதவியுடன் புதிய கட்டடம்



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அமையவுள்ள புதிய மூன்று மாடிக் கட்டிடத் திற்கான பணிகள் வைத்திய சாலையின் மத்திய தொழிற்பாட்டை மேம்படுத்தும் செயற்திட்டத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மூன்று மாடிக் கட்டிடத்திற்கான பணிகள் நவீன தொழில்நுட்பத்துடன் இடம் பெறுகிறுகிறது. ஜப்பான் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள 2900 மில்லியன் ரூபா நிதியில் அமையப் பெறுகின்ற இக்கட்டிடத் தொகுதியில் புதிய எக்ஸ்கதிர் பிரிவுகள் சி.ரி.ஸ்கான் ஈ.சி.ஜி எண்டல் கோப்பி ஆகியவற்றின் இயக்க சாதனங்கள் அமையப் பெறவுள்ளதுடன் மத்திய சத்திர சிகிச்சைக்கூடமும் அமைக்கப் படவுள்ளது. யாழ்ப்பாணத்திலே முதல்முறையாக மிகப்பெரும் நவீன தொழில்நுட்பம் பாவிக்கப்படுவது இக் கட்டிடத் தொகுதிக்கே என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## கோட்டை புனரமைப்பு

யாழ்ப்பாணம் டச்சு கோட்டையை சுற்றியுள்ள அகழியிலிருந்து மிதிவெடிகளை அகற்றும் பணிவேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நெதர்லாந்தின் நிதி உதவியுடன் இப்பணி இடம்பெற்று வருகின்றது. ஏறத்தாள புணரமைப்பதற்கு 100 மில்லியன் ரூபா செலவாகும் என புதைபொருள் ஆய்வுத் திணைக்களம் மதிப்பிடப்பட்டுள்ளது.

# விழிப்புணர்வின்மையே உணவகங்களின் உணவகச்சீர்கேடுகளுக்கு காரணம்



யாழ் குடாநாட்டு உணவகங்களை அன்றாடம் பயன்படுத்துபவர்ககள் உணவகங்களின் சுகாதார நிலை தொடர்பாக பல்வேறு குறைபாடுகளை முன்வைக்கின்றனர்.

இது தொடர்பாக யாழ் மாநகரசபையின் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் நா.சுகுமாரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, "உணவகங்களில் குடிநீர்,உணவு தயாரிப்பு, உணவுப்பொருள் மற்றும் உற்பத்திப் பொருட்களைக் களஞ்சியப் படுத்துதல்,கையாளுதல் பரிமாறுதல் போன்றவற்றில் சரியான ஒழுங்கு முறைகள் பின்பற்றப்படுவதில்லை.

குறிப்பாக வடிகால் பிரச்சினைகள், கழிவுநீர் வெளியேற்றுதல் போன்றவற்றில் குறைபாடுகள் காணப்படகின்றன. இதனால் டெங்கு போன்ற தொற்று நோய் அபாயமும் ,துர்நாற்றமும் ஏற்பட்டுள்ளது.

இவற்றை சீர்செய்ய வேண்டும் என்று உரிமையாளர்கள் யோசிப்பதில்லை. பணம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற இலாப நோக்கினைக் கருத்தில் கொண்டே உணவகங்களை நடாத்துகின்றார்கள் உணவகங்களில் வேலை செய்யும் ஊழியர்கள் கடும் சுகாதார ஒழுங்கு முறைகளை கடைப்பிடிப்பதில்லை. அவர்கள் வேலைக்கு வருபவர்களாக இருக்கின்றனர்.தனிநபர் சுகாதாரம் கடைப்பிடிப்பதிலும் பின் நிற்கின்றார்கள். இது தொடர்பாக மக்களும் அக்கறை செலுத்துவதில்லை.

கலாவதியான,சுகாதாரம் அற்ற பழுதடைந்த நிலையில் உள்ள உணவுப்பொருட்களை விற்பதைப் பார்த்தும் மக்கள் வாய் மூடிக் கொண்டிருக்கின்றார்கள் எதிர்த்துக் கேள்வி கேட்பதற்கோ, அது பற்றி ஆராய்வதற்கோ பின்நிற்கின்றார்கள்.

அத்தோடு உரியவர்களுக்கு அறிவிப்பதிலும் பின் நிற்கின்றார்கள். இவ்வாறான விடயங்கள் உணவகங்களை நடாத்துவோருக்கு வாய்ப்பாக அமைந்து விடுகின்றது. இதுபற்றி மக்கள் சிந்திக்கத் தெரியாதவர்களாகவே காணப் படுகின்றனர். இருப்பினும், இது தொடர்பாக திடீர் சோதனைகளை நடாத்தி உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நாங்கள் பின்நிற்கப் போவதில்லை'' எனவும் குறிப்பிட்டார்.

புவிதா



வேலணைப்பிரதேச போக்குவரத்துப்பிரச்சனை



சிதைந்துபோன வன்னி சிறார்களின் புன்னகை




இந்தியா வீட்டுத்திட்டம் தாமதமான நிலையில்



இராமேஸ்வரத்தில் ஈழ அகதி முகாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடாம் வெளிநாடு!




நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டு நல்வளங்களும் அழகிய நகரங்களையும் வரலாற்றுச் சிறப்பு மிக்க பல்வேறு இடங்களையும் கண்கவர் பூங்காக்கள் மலைகள் சுற்றுலா பிரதேசங்கள் பயிர்ச்செய்கை வளம் பொருந்திய மண்வளம் பிரசித்தி பெற்ற திருத்தலங்கள் இப்படி எல்லாவற்றுக்குமே பெயர் போன நம் ஈழம் என்னும் இலங்கை இத்தகைய பூமி தனை விட்டு வெளிநாட்டு மோகம் கொண்ட எத்தனை பேர்? நீங்களே சொல்லுங்கள் உங்களுக்கு இல்லையா இந்த ஆசை?

எம்மவர்களின் பார்வைக்கு வெளிநாடுகள் செல்வச் செழிப்பான சொகுஷான வாழ்க்கை முறையை கொண்டிருப்பதான ஒரு மாயைத் தோற்றத்தை வழங்குகின்றது. இவற்றின் போலித்தோற்றம் பற்றி புரிந்து கொள்ளாமல் நாமும் அங்கு செல்ல வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம். பெரும்பாலும் இவ் ஆசை இளம் வயதினர்களில் தோன்றுகின்றது. அவர்களின் மனதில் நாம் இங்கிருப்பதைவிட வெளிநாட்டுக்கு சென்றால் நிறைய உழைக்கலாம் எமக்கு விரும்பியவாறு சந்தோசாமான வாழ்க்கை வாழலாம் என்ற எண்ணம் குடிகொண்டு விடுகிறது.

எத்தனையோ இளைஞர்கள் வெளிநாடு செல்ல வேண்டும் என்பதற்காய் தமது பள்ளிப்படிப்பை இடைநிறுத்தியுள்ளனர். எத்தனை பேர் இதில் வெற்றியடைந்துள்ளனர்? மிகமிக குறைவு. தோற்றவர்களின் நிலை என்ன? கல்வியும் இல்லை வெளிநாடும் இல்லை. இதெல்லாம் வீட்டில் பணம் படைத்தோர்க்கு பெரிதில்லை. ஆனால் ஏழைகளின் நிலையை சற்று சிந்தித்து பாருங்கள்.

என்ர பொடியன் வெளிநாட்டுக்கு போகப்போறான் அவன் அங்க போய் உழைச்சு காசு அனுப்புவான். எங்கட கஸ்ரம் எல்லாம் போய் விடும் என்று எத்தனை பெற்றோர்கள் எத்தனை கனவுகளோடு! இருக்கிறதெல்லாம் விற்று வங்கியிலும் பக்கத்து வீட்டிலேயும் கடனை வாங்கி தமக்கென்று சொல்ல ஒரு சொத்தும் இல்லாமல் தம் பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கின்றனர். பையனும் நான் வெளிநாடு போய் நிறைய உழைக்க வேண்டும். குடும்பத்தை நல்லபடியாக பார்க்க வேண்டும். ஏன் பெற்றோருக்கும் குடும்பத்திற்கும் இனிமேல் எந்த வித கஸ்ரமும் வரக்கூடாது. நான் அவர்களை காப்பாற்றுவேன்.என்று பலபல எண்ணங்களோடு புறப்படுவான். மாதங்கள் சில உருண்டோடின.



ஆனால் பையன் பாதிவழியில். நாடும் இல்லை வெளிநாடும் இல்லை கேட்டால் ஏஜென்சி அனுப்புறன் அனுப்புறன் என்றதையே வேதவாக்காய் சொல்லி கொண்டு இருப்பான். குடும்பமோ நடுவீதியில். இது போன்று ஒரு பக்கம் இருந்தாலும் மறுபக்கம் பையன் வெளிநாடு போய் சேர்ந்து விட்டான். கை நிறைய சம்பாதிக்கின்றான். ஆரம்ப காலத்தில் சேமிப்பின் ஒரு பகுதியை வீட்டுக்கு அனுப்பி வந்தான். காலம் போக போக வெளிநாட்டு கலாச்சாரம் அவனது குடும்பத்தை மறப்பிக்க செய்தது. குடும்பத்தின் நிலை மறுபடியும் பழைய இடத்தில்.

இதே போன்று பெண் பிள்ளைகள் வெளிநாட்டுத் திருமணம் என்ற பெயரில் வெளிநாட்டு வாழ்க்கை வாழ ஆசைப் படுகின்றனர். பெற்றோரும் திருமணம் முடிவு பண்ணி பிள்ளையை வெளிநாட்டிற்கு அனுப்பி வைக்கின்றனர். அங்கு சென்ற பின்பு தான் தெரியும் வலிகளும் வேதனைகளும். நாமும் தினம் தினம் பத்திரிகைகளில் படிக்கிறோம். வெளிநாட்டு பையனுக்கு நம்ம நாட்டு பெண் திருமணம் செய்வதாகச் செல்கிறாள். திருமணம் நடந்து முடிகின்றது. சிறிது காலத்தின் பின் தான் தெரிய வரும் வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு ஏற்கனவே அங்கு திருமணம் ஆகிவிட்டது. சில வேளையில் குழந்தையும் இருக்கிறதென்று!

வெளிநாடு வெளிநாடு என்று ஆசைப்பட்டு தம் வாழ்க்கையை அழித்து கொண்ட பெண்கள் எத்தனை, ஆண்கள் எத்தனை? இவற்றையெல்லாம் அறிந்திருந்தும் நம்மவர்களின் மனதில் ஏதும் மாற்றம் உண்டா? என் பெண் வெளிநாடு போனால் சந்தோஷமாய் இருப்பாள் மாற்றம் உண்டோ? பாஸ்போர்ட் விசா என்றதுக்கெல்லாம் எவ்வளவு காசை செலவளிக்கின்றோம். ஏஜென்சிக்கு இலட்சக்கணக்காக காசை செலவழிக்கிறோம். எதற்காக? அந்த பணத்தை வைத்து உங்கள் நாட்டில் உங்களால் ஒரு வேலை செய்து உழைக்க முடியாதா? சற்று சிந்தித்து பாருங்கள். உங்கள் தாய் மண் இதில் நீங்கள் வாழாமல் வேறு யார் வாழ்வது? ஏன் உங்களுக்கு அடுத்த நாட்டு மோகம்?

துக்கத்தையும் துயரத்தையும் அனுபவித்து பார்த்தவனுக்குத் தான் வலியும் வேதனையும் புரியும் வலியும் வேதனையும் இல்லாமல் வாழ்பவனும் எவருமில்லை . வெளிநாட்டு வாழ்கையிலும் இவை உள்ளன. இதை நாம் ஒவ்வொருவரும் சிந்தித்து பார்த்தல் அவசியாமானதாகும். நம் நாட்டில் நமக்கு பிழைக்கத் தெரியாது. என்று அயல் நாட்டிற்கு போகின்றோம். அங்கு மட்டும் சந்தோஷமாக வாழ்ந்து நீங்கள் நினைத்தது எல்லாம் அடையலாம் என்ற எண்ணம் உங்களுக்கு எப்படி வந்தது? தொடர்பாடலுக்கு முதன் மூலமே மொழிதான். அடுத்த நாட்டில் பேசும் மொழி யாரறிவார். சென்ற ஆரம்பகாலங்களில் மொழி பயில வேண்டும்.

நமக்கென்று என்ன வேலை காத்துக் கொண்டிருக்கின்றதோ? அதை செய்வது சுலபமோ கடினமோ? இயற்கைதான் எமக்கு ஒத்துப்போகுமோ? காலநிலை மாற்றங்களுக்கு எம்மால் ஈடுகொடுக்க முடியுமா?. இதையெல்லாம் உங்களால் வெற்றி கொள்ள முடியுமா? இதைவிட நம் நாட்டில் இருந்து நமக்குத் தெரிந்த வேலையை செய்து கொண்டு வாழ்க்கை நடத்த முடியாதா? இதெல்லாம் ஒரு பக்கம் இருக்க அந்த நாட்டு சிட்டிசன் கிடைக்கணும். வெளிநாட்டுக்காரன் நாம் அவன் தேசத்திற்கு சென்றாற் போல எங்களை மாலை போட்டு மரியாதை செய்து நல்ல வேலை தங்க வீடு தேவையான வசதி வாய்ப்புகள் எல்லாவற்றையும் வைத்துகொண்டு காத்திருப்பானா? எமது வாழ்க்கைதான் முற்றிலும் வசந்தமாகுமா? "கொடுமையிலும் கொடுமை தனிமை" இதை நாம் எல்லோரும் அறிந்ததொன்று.

நாம் அப்பா அம்மா அக்கா அண்ணா தம்பி தங்கை உற்றார் உறவினர் என்று சொந்தங்கள் யாவற்றையும் பிரிந்து நமக்கு மட்டும் ஒரு தனி உலகத்தை தேடிச் செல்கிறோம். தொலைபேசி எடுத்தால் அவர்களின் குடும்பத்தில் தாய் தந்தையரைத் தவிர பிள்ளைகள் அனைவரும் வெளிநாட்டில்! வெளிநாட்டில் தாம் பெற்ற பிள்ளைகளை வளர்க்க வெளிநாட்டில் "செவிலி தாய்" நம்நாட்டில் பிள்ளைகளின் பெற்றோரை பராமரிக்க 'முதியோர் இல்லம்' வயது வந்தவர்கள். எவ்வளவு காலம் தனிமையில் இருப்பது. கடைசி காலத்தில் வாழும் போது சந்தோஷமாக பக்கத்தில் இருந்து பார்க்க பிள்ளைகள் இல்லை. இறந்த பின் கொள்ளி போட மட்டும் ஏன்? எத்தனையோபேர் சோகங்கள் மனதை வாட்டினால் வெளியில் சொன்னால் தன் குடும்பம் நண்பர்கள் கவலைப்படுவார்கள் என்று தமக்குள்ளேயே அழுது கொண்டு வாழ்கின்றார்கள்?

நம் நாட்டை விட்டு வெளிநாடு செல்லும் போது எம் தாய் நாட்டிற்கு எவ்வளவு பாதிப்புகள் என்று சிந்தித்தோமா? எமது நாட்டில் இளஞ்சந்ததியினர் இல்லாமல் போகின்றனர். இளைஞர்களே நாளைய சமுதாயம் எமது நாட்டிற்கு சிந்த வேண்டிய வியர்வை அடுத்த நாட்டில் விளைவாக வருகின்றது. அறிவையும் உழைப்பையும் அடுத்தவன் அனுபவிக்கின்றான். நம் நாட்டுக்காரன் வெளிநாடு சென்று ஒரு கண்டுபிடிப்பு செய்தால் அது அந்த நாட்டிற்குத்தான் பெருமை. அதே அவன் நம் நாட்டில் செய்தால் நமக்கல்லவா பெயர். எமது நாட்டு வளங்கள் பயன்டுத்தப்படாமலும் அவற்றின் அளவு வீழ்ச்சி அடைவதுமாகக் காணப் படுகின்றது.

நாடு முன்னேறிக் கொண்டு செல்கின்ற வீதம் குறைவடைகின்றது. தொழில்நுட்ப வளர்ச்சி அறிவியல் வளர்ச்சி கண்டுபிடிப்புகள் ஆராய்ச்சிகள் பெரியதளவில் வளர்ச்சியை காட்டவில்லை இது எல்லாம் எப்படி? நம் நாட்டு இரத்தங்கள் அயல் நாட்டில் வியர்வையாக...

எமது நாட்டில் சுயமாக தொழில் செய்து உழைக்க முடியாது என்று நினைக்கிறீர்களா.? வெளிநாட்டில் அடுத்தவனுக்கு கீழே நின்று உழைக்க முடியும் ஆனால் நம் சொந்த மண்ணில் நாமாகவே உழைக்க முடியாதா? வெளிநாட்டு வாழ்க்கையை கலாசாரத்தை இங்கிருந்து பார்த்து ஆசைப்படுதல் கூடாது. இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை இது நாம் எல்லோரும் அறிந்ததே. வாழ வேண்டிய இடத்தில் வாழ்கின்ற போதுதான் வாழ்க்கையின் சுகம் என்னவென்று தெரியும். சந்தோஷமாக அனுபவிக்கத்தான் வாழ்க்கை... அயல் நாட்டில் அநாதைகளாய் அழுவதற்கு அல்ல..... வாழ்வதும் சாவதும் நம் நாட்டில் நம் தாய் மண்ணில் தான்............

நே.நிருஷாந

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மாவட்டத்தை ஆக்கிரமிக்கவுள்ள குடி நீர் பிரச்சனை

யாழ் மாவட்டத்தை பொறுத்த வரையிலும் தீவகத்தை பொறுத்தவரையிலும் குடிநீர் பற்றாக்குறை கடந்த பத்து வருடங்களுக்கு முற்பட்ட காலப்பகுதியை எடுத்து நோக்கினால் இல்லை என்றே குறிப்பிட முடியும். ஆனால் தற்போதுள்ள நிலையோ வேறு தீவகப்பகுதிகளில் வறட்சி தலைதூக்கியுள்ளது. நீண்ட வரிசையில் காத்து நின்று குடிநீரை பெற வேண்டியநிலை உருவாகியுள்ளது. தீவகத்தின் குறிப்பிட்ட ஒரு பகுதியில் கடந்த மாதம் குடிநீருக்கு சிறு தொகைப் பணம் செலுத்தி பெற்ற நிலையும் உண்டு. இவ்வாறான நிலை யாழ். மாவட்டத்தில் உருவாவதற்கு நீண்ட காலம் எடுக்கப் போவதில்லை. குறிப்பிட்ட சில இடங்களில் குடி நீர்ப்பிரச்சனை தற்போதே உருவாகி விட்டது என கூற முடியும். இவ்வாறான நிலை தொடருமாயின் குடிநீருக்கு பிற நாடுகளை அல்லது கொழும்பு நகரத்தை போன்று மாதாந்தம் நீருக்கு பணம் செலுத்திப் பெற வேண்டிய நிலை கிராமங்கள் தோறும் உருவாவதற்கு வெகுகாலம் செல்லப் போவதில்லை ஏனைய **யாழ்நகரின் சில பகுதிகளில் குழாய் மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றமை யாவரும் அறிந்ததே.**

இவ்வாறான ஒரு அச்சுறுத்தலான நிலையை இல்லாதொழிக்க வேண்டும் அல்லது குறைக்க வேண்டும் எனில் என்ன செய்ய வேண்டும் அதை எவ்வாறு செய்ய வேண்டும் என்பது சமூகத்தில் அக்கறையுள்ள அனைவரது கடமையாகும். எனவே அனைவரும் இணைந்து செயற்பட்டு யாழ் குடாநாட்டை குடிநீர் அச்சுறுத்தலிருந்து பாதுகாக்க செயற்பாடுகளை முன்னெடுப்போம். அவ்வாறாயின் எம்மால் இவ் அச்சுறுத்தலை குறைக்க எடுக்க வேண்டிய முன் எச்சரிக்கை நடவடிக்கை வருமாறு. சாலையோரம் மரம் நாட்டுதல், மரம் தறித்தலை தடுத்தல், நீரை தூய்மையாக பேணல், வீண்விரயம் செய்யாமை ஆகியன இவற்றுக்கு சகல தரப்பினரிடையேயும் விழிப்புணர்வு நடவடிக்கை அவசியம் அதை விடுத்து நாம் ஏன் இதை செய்ய வேண்டும் என்ற மனப்பாங்கு மக்களிடையே மேலோங்கி காணப்பட்டால் குடிநீர் பற்றாக்குறை உருவாகியே தீரும். எனவே யாழ் மாவட்டத்தை அச்சுறுத்தப் போகும் குடி நீர் பிரச்சனையை இல்லாதொழிக்க முன் வர வேண்டும்.

நே.நிரு

# ஆரம்பப் பிரிவு ஆசிரியர் பற்றாக்குறை திண்டாடும் யாழ் மாவட்ட பாடசாலைகள்

யாழ் மாவட்டத்துப் பாடசாலைகளில் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை பெரும் பிரச்சனையாக காணப்படுகின்றது. ஆரம்பக்கல்வியென்பது மிகவும் அத்தியாவசியமானதாகும். ஆரம்பத்தில் ஊட்டப்படும் கல்வி உரிய முறையில் நன்கு திட்டமிடப்பட்டு புகட்டப்பட வேண்டும். என்பதனைக் கல்வித் திணைக்களம் முதல் பெற்றோர்கள் கல்வியாளாளர்கள் என அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

எனவே தான் ஆரம்பகல்வி ஆசிரியர்களின் பற்றாக்குறை பற்றியும் ஆரம்பக்கல்வியை சில ஆசிரியர்கள் பொழுது போக்காக கற்பித்து வரும் நிலைமையும் அதற்குக் கல்வி அதிகாரிகள் உடந்தையாக இருந்த வருகின்றமையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டிய தேவை எழுந்துள்ளது. இன்று இளைய தலைமுறையொன்று தறிகெட்டு நிற்கின்றது மூத்த தலைமுறைக்கு மதிப்பளிப்பதில்லை கலச்சாரப் பிறழ்வுக்கு உள்ளாகின்றது. அடாவடித்தானம் புரிகின்றது அந்த வகையில் இன்று ஆரம்பப்பிரிவு மாணவர்களின் கல்வி நிலைமையிற் ஆரம்பப்பிரிவிற்கு தகுதி வாய்ந்த ஆசிரியர்களையே நியமனம் செய்ய வேண்டும். வெறுமனே மாணவர்களின் எண்ணிக்கை மட்டும் கணக்கிலெடுத்து ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவதை தவிர்த்து பாடசாலையொன்றில் வெற்றிடமாகவுள்ள பாடநெறிகட்கு பொருத்தமானவர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும்.

குறிப்பாக இந்த நியமனங்கள் ஆரம்பப்பிரிவு வகுப்புக்கள் விடயத்தில் மிகவும் கவனமாகவும் அக்கறையாகவும் செய்யப்பட வேண்டும் சாதரணமாக ஒரு வீட்டில் கூட இரவு வேளைகளில் பிள்ளைகளுக்கு பாடங்களை பெற்றோர் கற்பிப்பதற்கு படாத பாடு படுகின்றனர். ஒவ்வொரு பிள்ளையும் ஓவ்வொரு கோணத்தில் ஒவ்வொரு விடயத்தை கேட்பதும் குழப்புவதும் என்ற நிலை ஏற்படும் இந்த வகையில் பல்வேறு குடும்பச் சூழல்களில் இருந்த வரும் பிள்ளைகளை ஓரே இடத்தில் வைத்து கல்வி கற்பிப்பது என்பது எந்தளவு சுமையானது என்பதை உணர வேண்டும். சில மாணவர்கள் ஏனைய பிள்ளைகளிடம் உள்ளது தன்னிடம் இல்லை என்பன போன்ற தாழ்வு சிக்கல்கள் குழு நிலை செயற்பாடுகளுக்கு முகங்கொடுக்க முடியாமை என்னும் பிரச்சினைக்கு உள்ளாகின்றார்கள். இதனால் குழப்பம், ஒதுங்கியிருத்தல், கோபப்படல், அழுகை, சிறிய பொருட்களை உடைத்தல், சண்டைபிடித்தல் எனப்பல விளைவுகளுக்கு வித்திட்டு ஒரு நெருக்கடியான சூழ்நிலைக்குள் பிள்ளைகளை இட்டுச் செல்கின்றது.

நாளடைவில் பிள்ளைகள் பாடசாலையை வெறுக்கும் நிலை ஏற்படுகின்றது. சிறுவயதில் அடக்கிய உணர்வுகள் கட்டிளமை பருவத்தில் எழுந்த பல விதமான உளச்சிக்கல்களையும் நடத்தை மாற்றங்களையும் ஏற்படுத்துகின்றது. ஆரம்பப் பாடசாலை பலவற்றில் ஐந்து வரை மட்டுமே காணப்படுகின்றது.

இந்தக்கல்வி முறை வெற்றியளிக்குமா? என்றால் இல்லையென்றே கூறலாம். பெற்றோர்களிடம் பிள்ளைகள் ஏன் பாடசாலைக்கு செல்லவில்லை என்று கேட்டால் **"இன்று ஆசிரியை மற்ற வகுப்புக்கு படிப்பிக்கிறா அதனால் இவர்கள் வெய்யிலில் விளையாடுவர்கள் பாடம் நடக்காது"** எனக் காரணம் கூறிவார்.

ஆசிரியர்களை கேட்டால் "நாங்கள் என்ன செய்ய முடியும் இரண்டு வகுப்புக்களை ஓரே நேரத்தில் நடத்துவது என்பது எந்தளவு சாத்தியப்படும் ஒரு பிள்ளைக்கு ஒரு விடயத்தை சொல்லி கொடுத்து விட்டு அடுத்த வகுப்பிற்கு செல்வதற்கிடையில் மாணவர்கள் சத்தம் போட்டு அடித்து கொள்கின்றார்கள்" என்று சலித்து கொள்கின்றார்கள்.

சிறார்களின் தேவைகளை உணர்வகள் கருத்தில் கொள்ளப்படுவதில்லை மாணவர்களின் ஆக்கங்கள் திறமைகள் வெளிப்படுத்தப் படுவதில்லை மாணவர்கள் இந்நிலையில் கல்வி மேல் கோபம் கொள்வார்கள் இவ்வாறு வெறுமனே ஆசிரியர் மாணவர்கள் என்ற நிலைமையே தொடர்ந்து காணப்பட்டால் நல்லதொரு சமுகத்தை எதிர்காலத்தில் உருவாக்குவது என்பது பெரும் கேள்விக்குறியதாகி விடும்

நே.சந்தோஸ்

# இரக்கம் காட்டுவார்களா? இவர்கள்

யாழ்ப்பாணம் தீவகப் பகுதிகளில் கட்டாக்காலி கால்நடைகள் அதிகம் இருக்கின்றன. யுத்தத்தின் பின்னர் மீளக் குடியமர்ந்த மக்கள் சுதந்திரமாக நடமாடியவற்றை தமது சொந்தம் என்று அடையாளப்படுத்த



குறியிடுதல், கயிறு கட்டி விடுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள்.

இவை சிறிய கன்றுகளாக இருக்கும் போதே கழுத்திலோ அல்லது காலிலோ கயிறு கட்டி விடுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள் இவை சிறிய கன்றுகளாக இருக்கும் பின்னர் இவை கயிற்றை அறுத்துக் கொண்டு மீண்டும் சுதந்திரமாக நடமாட ஆரம்பிக்கும் அல்லது இவர்களே கழுத்தில் கயிற்றோடு அவிழ்த்து விடுவார்கள்

இவை வளர்வதற்கு ஏற்ப கழுத்திலோ அல்லது காலிலோ உள்ள கயிறுகள் வளருவதில்லை இதனால் கயிறுகள் வெட்ட வெட்ட அந்த இடத்தில் புண் உருவாகி காலில் என்றால் கால் இல்லாமலும் கழுத்தில் என்றால் அவை உயிர் இழக்கும் நிலைமையும் காணப்படும் எனவே இப்படியான செயலில் ஈடுபடும் மக்களே நீங்கள் கொஞ்சம் இரக்கம் காட்டி அவை வளர வளர கயிற்றையாவது அதற்கேற்ப போட்டு விடுங்கள். இவ்வாறான பாவச் செயலில் இருந்து விடுபடுவீர்கள்.

சிந்துயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதைந்து போன வன்னி சிறார்களின் புன்னகை

யுத்தம் எனும் சவரங்களின் பிடிகளில் அகப்பட்டோர் இலட்சக்கணக்கானோர். அதில் இருந்து மீண்டு வந்தது ஆயிரக் கணக்கானோர் தான். உறவுகளை இழந்து உடமைகளை மறந்து உயிரை மட்டும் கையில் கொண்டு வந்து சேர்ந்தது பல இதயங்கள். இதை எல்லாம் பத்திரிகைகள் மூலமோ நேரடியாகவோ நாம் கேள்விப்பட்டு இருக்கிறோம். எல்லாவற்றையும் தாங்கும் மனத்திடம் பெரியவர்களுக்கு உண்டு. ஆனால் இப் பூமியிலே வந்து பிறந்ததை விட வேறென்ன தப்புச் செய்தனர் இந்த யுத்ததில் பாதிக்கப்பட்ட சிறார்கள்?

மழலையும் மலரும் ஒன்றென்பர். குழந்தையின் சிரிப்பில் இறைவன் இருப்பார் என்பர். இருந்த போதிலும் இன்று எல்லாவற்றையும் இழந்து தம் புன்னகைகளை தொலைத்து விட்டு வெற்று பார்வையோடு உலா வரும் சிறார்களை எண்ணி பாருங்கள்?

உலகை ஜெயிக்க பிறந்த இப்பாலகர்கள் இன்று உலகை வெறுத்து பிரமை பிடித்து போயுள்ளார்கள். இவர்களை மீண்டும் மீட்டெடுத்து வர முடியுமா? இல்லை அவர்களின் இழந்த சந்தோஷங்களை திரும்பக் கொடுக்க முடியுமா? இனி இவர்கள் முகத்தில் பிள்ளை குறும்பு சிரிப்பினை மீண்டும் பார்த்திட முடியுமா? இக் கேள்விகளுக்கு எல்லாம் யார் விடை கூறவுள்ளனர்?

வறுமையோ செல்வ நிலையோ எதுவாயினும் பெற்றோரின் அன்பு துணைவர உற்றார் உறவினர்கள் அரவணைப்பு இன்பம் தர உற்சாகமாய் உலா வந்தனர். தம் பிரதேசங்களில் குழந்தை பருவ குறும்புகள் அறிவு நிறைந்த பாடல்களும் யாரையும் கட்டிப்போடும் மழலைப் பேச்சுக்களாய் எத்தனை எத்தனை இளஞ்சிட்டுக்கள் இன்பமாய் காற்றோடு கதை பேசி கண்களில் கனிவை சுமந்திருந்தனர்.

பிள்ளைகள் பிறக்கின்ற போது தான் பெற்றோரின்



கனவுகளும் வலுப் பெறுகின்றன. தன் பிள்ளையின் வாழ்வு சிறப்பானதாய் அமைய ஒவ்வொரு பெற்றோரும் ஒவ்வொரு நிமிடங்களிலும் தம்மை மெழுகாய் உருக்குவார்கள்.

இதே போன்று எத்தனையோ ஆயிரம் பெற்றோர் தான் பிள்ளைகள் பற்றிய கனவுகளை தம்முள்ளே சுமந்திருக்கின்றனர். சுகமும் நிம்மதியும் சூழ்ந்திருக்க இன்பமாய் வாழ்ந்திருந்தனர்.

போர் அரக்கன் தன் வஞ்சகக் குணத்தை காட்டியது அப்பாவி மக்களிடம் தான். அதில் சிதைந்து போனவை ஓராயிரம் உணர்வுகள் உறைந்து கொள்ள உடல்கள் உருக்குலைய உயிர் என்று பிரியும் என்பதை அறியாமல் பெற்றோர். என்ன நடக்குமென்பதை புரிந்து கொள்ள முடியாத ஒரு சில பாலகர்கள் ஒரு புறம் புரிந்து பயந்து போன சிறார்கள் மறுபுறம் என எத்தனையோ பரிதாபங்கள்.

பசியெடுத்து அழும் பிள்ளை யைப் பார்த்து கண்ணீர் வடித்த பெற்றோர் ஓராயிரம் பசியை தாங்கிட முடியாமல் சுருண்டு போன பிள்ளைகள் பல்லாயிரம் என வேதனைகளும் சோதனைகளும் எழுத்திலடங்கா!

இறந்த பிள்ளைகளை புதைந்து போன மண் மேட்டிலிருந்து மீட்டு வர யார் உள்ளனர். நாளைய எதிர்காலச் சந்ததியில் ஒரு பகுதியினர் பூமிக்குள் உறங்கி கொண்டிருக்கின்றனர். அவர்களை தட்டி எழுப்புபவர் யாரேனும் உள்ளனரா?

தம் கண்முன்னே பெற்றோரை இழந்த பிள்ளைகள் வடுக்களையும் கடந்து வந்த பிள்ளைகள் போரினால் ஊனமான பிள்ளைகள் என மீண்டு வந்தோரில் பெருந்தொகுதியானோர் முடங்கியுள்ளனர். அநாதைகளாய் அள்ளியெடுக்க பெற்றோர் இன்றி அணைத்துக் கொள்ள உறவினர் இன்றி பாசத்திற்கும் நேசத்திற்கும் ஏங்கி நிற்கும் பிள்ளை உள்ளங்களை என்ன செய்வது?

பிள்ளைகளைப் பொறுப் பேற்று அழைத்துச் செல்லும் எல்லா இல்லங்களும் பிள்ளைகளின் இயல்பான வாழ்விற்கு உத்தரவாத மளிப்பது இல்லை.

சமூகம் இப் பிள்ளைகளை "அநாதை" எனப் பட்டப்பெயர் சூட்டி ஒதுக்கி வைக்கின்றது. அவர்களிற்கான தம் உதவிகளை வழங்குவதற்கு ஏனோ என்றும் பின்னிற்கிறார்கள்.

பிறந்த நாள் தொட்டு கை பிடித்து கதைபேசி வந்த பெற்றோரின் இறப்பை பார்த்த பிள்ளைகள் என்ன செய்வார்கள்? துன்பங்கள், துயரங்கள், இன்னல்கள், பசிக் கொடுமை என எல்லா வகை வேதனைகளையும் இள வயதிலே சுமந்த சிறார்களுக்கு இனி விடியல் உண்டா? மாறிச் செல்லுமா யுத்தம்



தந்த வடுக்கள்?

அழகாய் பிஞ்சு பாதம் பதித்து ஓடித் திரிந்த சிறார் பலர் நடக்க காலின்றி ஊன்று கோலின் உதவியுடன் நடக்கின்றனர். கைதட்டி கண் பொத்தி விளையாடிய பாலகர்கள் பலர் ஆசை தீர உண்ணக் கூட கைகளின்றி இன்னொருவர் கையை எதிர்பார்க்கும் நிலையை என்னவென்று சொல்வது?

அழகாய் ஆடிப்பாடித் திரிந்த ஆயிரமாயிரம் இளஞ்சிட்டுக்கள் இன்று ஊனமாகிப் போனது அவர்கள் மனங்களையும் ஊனமாக்கி விட்டன. ஏனெனில் யாரேனும் அவர்களை பார்க்கின்ற வேளைகளில் தம் ஊனத்தைத் தான் பார்க்கின்றனர் என்றெண்ணி அவர்கள் கண்கள் நிலத்தை குத்தி நிற்கின்றன.

பாடசாலைகளிலோ சமுகத்திலோ எல்லோரும் அவர்களை மதிப்பது என்பது நடக்காத காரியம். கல் நெஞ்சு படைத்த ஒருசில இதயங்களும் எம்முள்ளே வாழ்ந்து கொண்டு தான் இருக்கின்றனர். அடுத்தவனை வேதனைப்படுத்துவதில் அவர்களுக்கு ஏனோ ஓர் தனி இன்பம் வெந்து போய் வந்திருப்பவர்களை மேலும் மேலும் வதைப்பதில் ஏன் தான் சந்தோசப்படுகிறார்களோ தெரியாது.

உடைந்து போயிருக்கும் இச்சிறார்களின் இதயங்களில் இருந்து இவற்றை மறைய வைப்பது எப்படி? உணவில் நாட்டமின்றி தூக்கமின்றி தூக்கத்திலிருந்து அலறியடித்து எழும்பும் இப்பிள்ளைகளை என்ன செய்வது? யுத்தம் தந்த வடுக்கள் அவர்களின் உள்ளத்தில் இருந்து அழிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இல்லாவிடில் எதிர்காலச் சந்ததியினர் வன்முறை நிறைந்தவர்களாகவோ? சித்தப்பிரமை பிடித்தவர்களாகவோ உருவாக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு.

சிறார்களின் மனதினிலே புதைந்துள்ள சோகங்கள் கண்ணீர் ஆதங்கங்கள் வெளிக்கொணர வேண்டிய உணர்வுகளை தம்முள்ளே அடக்கி அடக்கி வைத்துள்ளவர்கள் இறுதியில் மனக் குழப்பத்தில் தள்ளப்படுகிறார்கள்.

மேலும் அவர்கள் உணர்வுகள் அடக்கப்படுகின்ற போது அவர்களுள் உறங்கிக் கொண்டிருக்கும் உணர்வுகள் எல்லாம் எரிமலையாய் வெடிக்கும். அன்றைய பொழுதுகளில் இதுவரை அவர்கள் மனதில் சுமந்திருக்கின்ற வடுக்கள் ரணங்கள் எல்லாம் வன்முறையாக வெளிவரக்கூடும்.

தம் உணர்வுகளை வெளிச் சொல்ல முடியாதவர்கள் தவறான வழிகளில் தம் பயணங்களை தொடர்வதற்கான சாத்தியக்கூறுகள் நிறைய உண்டு. இச் சிறார்கள் பெரும்பாலும் தனிமையை விரும்பி செல்வார்கள். காரணம் அவர்கள் மனதில் ஏறப்பட்ட வெறுமை சிறந்த துணைகள் வழங்கப்பட வேண்டியது மிக மிக அவசியமானதாகும்.

உறவினரோ சகோதரரோ நண்பர் களோ அவர்களிற்கு உறவாய் துணை வர வேண்டும். அத்தோடு அவர்களையும் சமமாய் பார்ப்பதற்கு நம் சமூகம் தயாராக வேண்டும். எல்லோரும் எம் பிள்ளைகள் எனப்பார்க்கும் குணம் வர வேண்டும்.

பணவசதி படைத்தோர் இப் பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றி அவர்களின் வாழ்வை சிறப்பிக்க நினைக்க வேண்டும். இச் சிறார்கள் கல்வி வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்ய அனைவரும் முன் வர வேண்டும் அவர்களை புரிந்த கொள்ள வைக்க வேண்டும். நம்பிக்கை எனும் விதையை அவர்களுக்குள்ளே விதைத்து விருட்சமாக்க வேண்டும்.

உறவுகளை தொலைத்து விட்டு பாசத்திற்கு ஏங்கி தவிக்கும் இப் பிள்ளை உள்ளங்களை என்ன செய்ய? யுத்தக் கொடுமையால் மனதளவில் பாதிக்கப்பட்டு பிரமை பிடித்துப் போயிருக்கும் சிறார்களின் வாழ்க்கை எங்கே? ஒரு நேரம் வயிற்றை கழுவுவதற்காய் கையேந்தி நிற்கும் பிள்ளை செல்வங்களை கையில் தாங்க யாருள்ளனர்? கல்வி கற்க வசதி இல்லாததனால் வேலை பார்க்கும் சிறார்களை என்ன செய்ய? போரில் தம் உறவுகளை உடமைகளை உடல் உறுப்புக்களை உற்ற நண்பர்களை இழந்து போன இவர்களின் கள்ளமில்லா புன்னகைகளிற்கான பதில் என்ன? இத்தனை கேள்விகளிற்கும் யார் பதிலளிப்பது? அதற்கும் கால ஓட்டத்திற்காய் காத்திருக்கத் தான் வேண்டுமா? நேரங்கள் காலங்கள் கூடி வர காலம் கனிந்து இளம் சந்ததியினரின் எதிர்காலம் சிறக்கும் என்று நம்பிக்கை கீற்று மட்டும் எம்முள்ளே...

அன்பழகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக பத்திரிகை சுதந்திர நாள்- மே3

பத்திகைச் சுதந்திரத் துக்காக அடிப்படை ஐ.நா.வின் மனித உரிமைகள் பற்றிய சர்வதேச பிரகடனத்தில் 19உறுப்புரையில் குறிக்கப்பட்டுள்ளது. சர்வதேச குடியியல், அரசியல் உரிமைகள் சாசனத்திலும் 19வது உறுப்புரிமையில் இதற்கு சட்ட அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. பல்வேறு நாடுகளில் அரசியல் யாப்புக்களிலும் பத்திரிகைச் சுதந்திரத்திற்கான உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் நடைமுறையில் அரச கொள்கைகளுக்கமைய இந்த பத்திரிகைச சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு வந்துள்ளது. அமெரிக்க நீதியரசர் கார்டோஸே மற்றைய சுதந்திரத்திற் கெல்லாம் கருவாக திகழ்வது சிந்தனை, மற்றையது பேச்சுச் சுதந்திரம் என்றார்.

informed public is the Essence of working democracy எனக்கூறப்படும். ஒரு ஜனநாயக நாட்டில் பத்திரிகைச் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் இக்காலத்தில் வலியுறுத்தப் படுகிறது.

இது பற்றிய மக்களின் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், பத்திரிகை சுதந்திரத்தைப் பரப்பும் நோக்கிலும் மனித உரிமைகள் சாசனம் பகுதி 19 இல் இடம்பெற்றுள்ள பேச்சுரிமைக்கான சுதந்திரத்தை உலக நாடுகளின் அரசுகளுக்கு நினைவூட்டவும் ஐக்கிய நாடுகள் சபையினால் உலக பத்திரிகை சுதந்திர (World Press Freedom Day) சிறப்பு நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

1993 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி ஒவ்வோர் ஆண்டும் மே 3 ஆம் நாளன்று உலக பத்திரிகை சுதந்திர நாள் (World Press Freedom Day) ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆபிரிக்கப் பத்திரிகைகளால் கூட்டாக 1991 ஆம் ஆண்டு இந்நாளிலேயே பத்திரிகைச் சுதந்திர சாசனம் முன்வைக்கப்பட்டது.

இந்நாளில் ஊடக சுதந்திரத்துக்காகப் பங்களிப்பு செய்யும் ஒருவருக்கு வருடாவருடம் யுனெஸ்கோ நிறுவனத்தினர் விருது (UNESCO/Guillermo Cano World Press Freedom Prize) வழங்கிக் கௌரவிக்கின்றனர். இவ்விருது 1986 டிசம்பர் 17 இல் கொல்லப்பட்ட கொலம்பியஸ பத்திரிகையாளர் கில்லெர்மோ இசாசா (Guillermo Cano Isaza) என்பவரின் நினைவாக வழங்கப்பட்டு வருகிறது.

கி. பி. 10ம் நூற்றாண்டில் சீனாவில் ஒரு செய்தி ஏடு அரச சார்பாக தொடங்கப்பட்டுள்ளதை பிரித்தானியக் கலைக்களஞ்சியம் உறுதிப்படுத்துகின்றது. 1609ம் ஆண்டில் ஜேர்மனியில் பல நகரங்களில் செய்தித்தாள்கள் வெளியிடப்பட்டன. இதனைத் தொடர்ந்து செய்திப் பத்திரிகைகளின் தோற்றம் உலகளாவிய ரீதியில் வியாபித்தது. 1832ல் கொழும்பு ஜேர்னல் எனும் நாளிதழ் இலங்கையில் வெளியிடப்பட்டது.

பத்திரிகைச் சுதந்திரத்துக்கு அச்சுறுத்தலாகவும் அவமானமாகவும் உள்ள சட்டங்கள் பண்டைய ஆங்கிலக் கோட்பாட்டில் அடிப்படையில் பிறந்தவையாகும் அதாவது மன்னன் தவறு செய்வதில்லை என்ற அடிப்படை யாகும்.

பிரித்தானியப் பாரளுமன்றத்தில் மன்னனின் செலவீன ஒதுக்கீடு பற்றி விமர்சித்த ஆறு பாராளுமன்ற உறுப்பினர்கள் அப்போது தண்டிக்கப்பட்டார்கள். மன்னரின் இத்தகைய எதேச்சதிகாரப் போக்கிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்களைப் பாதுகாக்கும் நோக்கில் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் சட்டரீதியாகப்பட்டுள்ளது.

# இராமேஸ்வரத்தில் ஈழ அகதி முகாம்

இலங்கை மண் இனப் பிரச்சினையை எதிர்நோக்கிய காலத்தில் இருந்தது. அதாவது 1983 ம் ஆண்டில் இருந்து இலங்கைத் தமிழர்களின் ஏனைய நாடுகள் நோக்கிய இடப் பெயர்வுகள் ஆரம்பித்து இருந்தன. இதன் விளைவே எமது அண்டைய நாடான இந்தியாவில் இலங்கையில் தமிழர் இருப்பிடங்கள் போன்று உருவாகின.



அதுவே 'அகதி முகாம்' என்கிற பெயரில் இருக்கின்றன. தமிழகத்தில் 115 முகாம்களில் 25ஆயிரம் குடும்பங்கள 1இலட்சம் மக்கள் இருக்கிறார்கள். இப்படியான முகாம்களில ஒன்றுதான் இராமேஸ்வரத்தில் உள்ள மண்டபம் முகாம் 15000 தமிழர்கள் அகதிகளாக இருந்த பகுதி இப்போது 8000பேர் கொண்ட பரந்த மணல்வெளியும் வேப்ப மரங்களுமாகக் காட்சி தரும் இப் பகுதி ஒரு நீண்ட பரந்த பிரதேசமாகும். இவர்கள் குடியிருக்கும் கட்டிடங்கள் வரலாற்றுப் பழமை வாய்ந்ததாகும்.

அதாவது முன்னைய காலகட்டத்தில் தனுஸ்கோடி-மன்னார் ஊடான கடல்வழிப் போக்குவரத்து பிரசித்தம் அடைந்திருந்த காலம் இக்காலத்தில் தோட்டத் தொழிலாளர்கள் இந்தியாவில் இருந்தே இலங்கை கொண்டு வரப்பட்டார்கள். அவர்களை சோதனை செய்து இலங்கை அனுப்புவதற்காக கட்டிய கட்டிடங்களே அவையாகும். அக் கட்டிடங்களிலேயே மக்கள் வசித்து வருகிறார்கள். குறிப்பிட்ட ஒரு குடும்பத்துக்கு என ஒரு கட்டிடத் தொகுதியில் 1/10 பங்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் குடி நீர் வசதி குழாய் மூலம் வீடுகளுக்கு அருகில் கொண்டு வரப்பட்டாலும் குடி நீர் வீட்டில் இருப்பது போன்று எந் நேரமும் எடுக்க முடியாமல் உள்ளது. ஆனால் அகதியாக வாழும் ஒரு நாட்டில் இவ்வாறு எதிர்பார்ப்பது முட்டாள்தனமே.

தமிழகத்தில் இருக்கின்ற



முகாம்களில் இராமேஸ்வரம் மண்டபம் முகாமே. பாதுகாப்பு அதிகம் உள்ள முகாமாகும். இதற்கு காரணம் இதன் அமைவிடமே. ஏனெனில் கடற்கரைக்கு அருகில் அமைந்துள்ளதால் இந்தியாவிற்கு எதிரான சக்திகளின் ஊடுருவலைத் தடுப்பதற்காகவே இவ்வாறான பாதுகாப்பு ஏற்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் மிகவும் இறுக்கமான கட்டுப்பாடுகளும் இங்கே நடைமுறையில் உள்ளன.இந்த முகாம்களில் வசிப்பவர்கள் வெளியே செல்வதற்கு ஒரு நாள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். அத்துடன் இங்கு உள்ளவர்களின் உறவினர்களை பார்வையிடச் செல்பவர்கள் காவல்துறையினரின் அனுமதியுடனேயே உள்ளே செல்ல அனுமதிக்கப்படுவர்.

முகாம்களில் குறித்த ஒரு நபருக்கு குறிப்பிட்ட தொகை வழங்கப்படும் அதனை மட்டும் நம்பியே ஒரு குடும்பம் வாழ முடியாது. வெளியில் சென்று வேலை பார்த்தே ஆக வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றார்கள். அப்படியிருக்க அவர்கள் வெளியே செல்ல ஒரு நாள் மட்டுமே அனுமதிக்கப்படு வதால் தங்கி நின்று வேலை செய்ய முடியாத மிகவும் கஸ்ரமான சூழ்நிலையிலேயே இருக்கின்றார்கள். அத்துடன் முகாம்களில் கிடைக்கும் மலிவு விற்பனைப் பொருட்களும் இங்குள்ள மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இங்குள்ள மாணவர்களுக்காக ஒரு பாடசாலையும் நடாத்தப்பட்டுக்கொண்டு இருப்பது ஒரு நன்மை பயக்கும் விடயமாகும்.

இவர்களுக்கான கழிப்பறைகள் பற்றிப் பார்ப்போமேயானால் ஒரு கட்டடத் தொகுதிக்கு2 கழிப்பறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவை தொடர் கழிப்பறைகளாகக் காணப்படுகின்றன. எனவே கழிப்பறைகள் எல்லா வீடுகளுக்கும் அண்மையில் இல்லை. இக் கழிப்பறைகள் பெண்களுக்கு மட்டுமே. ஆண்கள் கடற்கரை வெளிகளுக்கே செல்ல வேண்டி உள்ளது. அத்துடன் இந்தக் கழிப்பறைகள் எந்நேரமும் பூட்டியே இருக்கும். இதற்கான சாவிகள் 10வீடுகளில் ஏதாவது இரு வீடுகளில் தான் இருக்கும். அதை இவர்கள் எடுத்து வந்தே பயன்படுத்த வேண்டும். இது கழிப்பறைகளின் சுத்தத்தைப் பேணுவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக் கையாகும். அத்துடன் இவை புதிதாக அமைக்கப்பட்டதாக காணப் படுகிறது.

மேலும் இவர்கள் குடிப்பதற்கு உரிய நீர் குழாய் மூலம் கிடைக்கப்பெற்றாலும் குளிப்பதற்கும் ஏனைய தேவைகளுக்கும் கிணறுகள் காணப்படுகின்றன. அவையும் கழிப்பறைகளைப் போன்று எல்லா வீடுகளுக்கும் அண்மியதாக இல்லை. இவற்றில் நீர் அள்ளுவதற்கு வரும் ஒவ்வொரு வீட்டு அங்கத்துவர்களும் தங்களுக்கு உரிய வாளிகளைக் கொண்டுவந்து பயன்படுத்தி விட்டு பின் கொண்டு செல்வார்கள். முகாம்களில் குறிப்பிட்ட சில தினங்களில் அதாவது சில ஞாயிற்றுக்கிழகைளில் 'தணிக்கை" என்று சொல்லப்படும் ஒரு செயற்பாடு நடைபெறும்.

அதாவது இத்தினத்தில் முகாம்களில் உள்ள யாரும் வெளியே செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள். இங்குள்ளவர்கள் அனைவரையும் முகாமின் அலுவலகத்துக்கு அழைத்து அங்கத்துவ அட்டைகளில் உள்ளது போல் குடும்ப அங்கத்துவர் எண்ணிக்கை சரியாக உள்ளதா என பார்க்கப்படும்.

எல்லா வீடுகளிலும் மின்சாரம் இலவசமாக வழங்கபபடுகிறது. இது ஒரு கொடையாகும். அத்துடன் கலைஞர் கருணாநிதி அவர்களினால் எல்லாக் குடும்பங்களுக்கும் தொலைக் காட்சிப்பெட்டி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. எமது நாட்டின் இறுக்கமான சூழலில் இருந்து மக்கள் விடுபட உதவும். என்றாலும் இதைவிட மிகவும் அத்தியாவசியமான தேவைகள் இங்குள்ளவர்களுக்கு இருக்கின்றன.

இந்த முகாம்களுக்குள்ளேயே சிறிய சிறிய கடைகள் காணப்படுகின்றன. அத்துடன் முகாமுக்கு வெளியேயும் கடைகள் காணப்படுகின்றன. இக்கடைகளை முகாமுக்கு வெளியே வசிப்பவர்களும் நடத்தி வருகின்றார்கள். சாதாரண தேவைகள் அனைத்தும் இங்கே நிறைவு செய்யப்பட்டாலும் மேலதீக தேவைகளுக்கு இராமநாடு எனப்படும் இடத்திற்குச் சென்றே மக்கள் நிறைவேற்றிக் கொள்கிறார்கள். அதைவிட முகாமுக்குள்ளேயே மலிவு பொருள் விற்பனைக் கடையும் காணப் படுகிறது.

இவர்கள் இலங்கையில் தமிழர் வாழும் பகுதியில் வசிப்பது போன்று அங்கே வசித்து வந்தாலும் ஏனோ! பாரத தேசத்துக்குரிய தமிழ் மொழி நடை தொற்றிக் கொண்டுள்ளது. ஆடைக் கலாச்சாரம் இந்தியாவிலும் இலங்கைத் தமிழர் போன்றே காணப்படுவதால் இவர்களில் பெரும்பாலான மாற்றம் இல்லை. இவ்வாறு இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து இந்தியாவில் அகதிகளாக வாழும் மக்கள் வாழ்கிறார்கள்.

சிந்துயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்களை தானம் அளிப்பதன் மூலம் பிறருக்கு ஒளி கொடுப்போம்

தானத்தில் சிறந்தது அன்னதானமென்பர். ஆனால் பார்வை இல்லாதவன் பெரும் அன்னதானமென்பது கண் தானத்தை தனக்கு அன்னமிட்டவரையும், அரவணைத்தவர்களின் உருவமும் தன் வாழ்நாளின் கடைசி வரை காணக் கிடைக்காத ஒரு வலியை அவனிடத்தில் ஏற்படுத்தவல்லது. அது அவனுக்கு பசியின் வலியை விட அதிக வலியையும் ஏக்கத்தையும் கொடுப்பது நிச்சயம். தான் இருக்கும் போது தன்னிடம் மிஞ்சியதை அன்னதானமாக கொடுப்பதை விட தான் இறந்த பிறகு தன்னுடலில் எஞ்சியதை கண்தானமாக கொடுப்பதே சிறந்தது.

உங்களுக்கும் இறந்த பிறகும் அடுத்தவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் நீங்களும் தயவு செய்து நிச்சயம் கண்தானம் செய்ய முன்வரவும். பார்வை இழப்பு எனும் பெரும் அவலத்தை அதிகம் சுமக்கும் தேசமாக நம் தேசம் இருக்கிறது. இன்று, ஒரு கோடியே 50 லட்சம் பேர் பார்வை குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில், 46 லட்சம் பேர், “கார்னியல்’ பார்வைக் கோளாறால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில், 60 சதவீதம் பேர் 12 வயதிற்குட்பட்ட குழந்தைகள். இவர்களுக்கு நம்மால் உதவ முடியுமா என்றால், நிச்சயமாக முடியும் அதுவும், கண் தானத்தினால் மட்டுமே. மரணமடைந்தவர்களின் கண்களை ஆறு மணி நேரத்திற்குள், அருகில் உள்ள கண் மருத்துவமனை வங்கிக்கு சேரும்படி செய்து விட்டால் போதும்... இறந்தவர் கண்கள் இரண்டு பேருக்கு பொருத்தப்பட்டு பார்வை பெறுவர்.

இதற்கு தேவை மனப்பக்குவம் மட்டுமே. இறந்தவர்களின் உறவினர் சம்மதம் பெற்றே கண் தானம் செய்ய முடியும். ஆகவே, உறவுக்காரர்களிடம் கண் தானத்தின் மகத்துவத்தை விளக்கி, கண் தானம் செய்ய சம்மதம் பெற வேண்டும். சம்மதம் கிடைத்ததும், அருகில் உள்ள கண் மருத்துவ மனைக்கு, போன் செய்தால் போதும். மருத்துவமனையில் இருந்து சம்பந்தபட்டவர்களே நேரில் வந்து, கண்களை எடுத்துச்சென்று விடுவர். ஒரு வயது நிரம்பிய குழந்தை முதல், எவ்வளவு வயதானவராக இருந்தாலும், அவரது கண்கள் தானமாக ஏற்றுக் கொள்ளப்படும். கண்களை எடுத்தபின் இமைகளை மூடி தைத்து விடுவதால், முகம் விகாரமாக தோன்றாது. அனைத்து ஜாதி, மதங்களும் கண் தானத்தை உயர்வான காரியமாகவே கருதுவதால், இது எந்த மத சம்பிரதாயத்திற்கும் எதிரானதல்ல என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். இறந்த பிறகு, மண்ணால் அரிக்கப்பட்டோ அல்லது தீயினால் எரிக்கப்பட்டோ, எவ்வித பலனும் இல்லாமல் போகக்கூடிய இறந்தவரின் கண்கள் தானமாகக் கிடைத்தால், இருவர் கண்கள் ஒளி பெறுவதுடன், இறந்த பிறகும் இவர்கள் மூலம் வாழ்கின்றனர் என்றே சொல்லலாம். அந்த வகையில், நம் மனதில் மனிதநேயம் நிறைந்து இருக்கும் பட்சத்தில், குடும்ப உறுப்பினர்களிடம், “நான் இறந்தால், என் கண்களை தானமாக கொடுத்து விடுங்கள்... அப்போதுதான் என் ஆன்மா சாந்தியடையும்!’ என்று சொல்லி வையுங்கள்.







அது ஒன்றே நிச்சய பலன் தரும். மற்றபடி, இறந்தவர்களின் வீடுகளில் இருப்பவர்களிடம் பேசி, கண்களை தானமாக பெறும் முயற்சியில் இறங்க வேண்டும். இந்த முயற்சி பலன் தந்தால், இரண்டு பேர் பார்வை பெறுவர் என்பதை எண்ணும் போது, அதற்காக எத்தகைய மான, அவமானங்களையும் பொறுத்துக் கொள்ளலாம்.

சரியாக சொல்வதானால் கண்களை தானமாக அளிப்பதன் மூலம், வாழும் வாழ்க்கை மட்டுமல்ல... வாழ்ந்த பிறகு கிடைக்கும் மரணம் கூட அர்த்தமாகும். இலங்கை மக்கள் தொகை தேவையான கண்கள் அதிகம் இலங்கையில் இருந்தே தானமாக பெறப்படுகிறது. இதற்கு காரணம், இலங்கையில் கண் தானம் என்பது கட்டாய தானம் போல! ஆனால், இங்கே இன்னும் அதற்கான விழிப்புணர்வு வரவில்லை. விழிப்புணர்வு வந்துவிட்டால், நம் தேவைக்கு போக, மற்ற நாட்டில் உள்ள கண் பார்வை இழந்தோருக்கு கூட தானம் செய்யலாம்.

வாழும் போது தான் சுயநலவாதியாய் வாழ்கின்றோம்,சாகும் போதும் அப்படித்தான் சாக வேண்டுமா? நாம் பார்த்துக் கொண்டிருக்கும் கண்ணை மற்றவருக்கு கொடுத்து விட்டு நம்மை குருடர்களாக இருக்கும் படி யாரும் கூறவில்லை.நாம் இறக்கும் போது எமது கண்ணை ஒரு பார்வை அற்றவருக்குக் கொடுத்து அந்த ஆத்மாவும், இந்தப் பூமியைப் பார்க்க வழி செய்வோம்.

கவி

# வலுவிழந்தோருக்கு வலுவூட்டும் பணியில் யாழ் ஜெய்பூர் நிறுவனம்

பொலி புறொபைலின் (poly propylene) எனப்படும் மூலப் பொருளை பயன்படுத்தி ஜ.சி.ஆர்.சி தொழில்நுட்பத்தில் தரமான அவயங்கள் கரங்கள் ,கால்கள்,மற்றும் குறைபாட்டு நிவர்த்தி உறுப்புக்கள் கழுத்துப்பட்டி முள்ளந்தண்டு இடுப்பு மற்றும் கால்களுக்கான உறுப்புக்கள் பொருத்தப்படுவதோடு அவற்றிற்கு தேவையான சில உதிரிப்பாகங்களை உருவாக்கி பாரிய வளர்ச்சியை காட்டுகின்றது. **யாழ் மண்ணிற்கு மாற்று வலுவுடையோருக்கு தேவைப்படும் நடமாடும் உபகரணங்களை உயர் தொழில்நுட்ப உத்திகளை பயன்படுத்தி வருகிறது.** இவற்றில் மின்கல சக்தியால் இயங்கும் முச்சக்கரவண்டி, சக்கர நாற்காலி, பார்வைக்குறைபாடு உடையோர்க்கான ஒளியுணர்த்தும் தடைதாங்கி என்பன எமது முகாமையாளரது உருவாக்கம் எனக் கூறுகின்றனர்.



மேலும் புனர்வாழ்வு பணியாளர்கள் மாதாந்தம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அபயம் இழந்தோர்க்காக வழங்கப்படும் அபயவ முன்பராமரிப்பு செயற்பாடுகள் காலந்தாழ்த்தாது சிறந்த முறையில் அவயம் பொருத்துவதில் பெரும் பங்கு வகிக்கிறது. இவற்றைவிட இன்னுமோர் சிறப்பம்சம் விசேட வைத்திய ஆலோசனை யாழ் போதன வைத்தியசாலை முன்பு முறிவு நெறிவு சத்திர சிகிச்சை நிபுணர் உயர்திரு டாக்டர் கே.உமாபதி அவர்களால் மாதாந்தம் இலவசமாக வழங்கப்படுகிறது.

மாற்று வலுவுடையோருக்கு தேவைப்படும் இயன் மருத்துவ உறுப்புக்கள் நடமாடும் உதவிகருவிகளை டாக்டர் அவர்கள் பரிந்துரை செய்வதோடு மேலதீக சிகிச்சையை யாழ் போதனா வைத்தியசாலையில் பெற வைப்பது கிடைத்தற்கரிய வரப்பிரசாதமாகும். மேலும் இவர்களால் மாணவர்கட்கு மாதாந்த கல்வி ஊக்குவிப்பும் ஏனையோருக்கு தொழிலுக்கான சுழற்சி முறை கடனுதவி என்பன வழங்கப்படுகின்ற ஏனைய புனர்வாழ்வு சேவைகளாகும். இன்று இது 24 ஆவது வருடத்தில் காலடி எடுத்து வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கம்சா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா வீட்டுத்திட்டம் தாமாதமானநிலையில்

இலங்கையில் இடம்பெற்ற போரினால் பெரும் அழிவுகளை சந்தித்த வடபகுதி மக்களுக்காக இந்தியா அமைத்து கொடுப்பதாக உறுதியளித்த வீட்டுத் திட்டம் தொடர்பான செயற்பாடு முடங்கி போயுள்ளது. இந்த நிலையில் அது பற்றிய சம்பந்தான அதிகாரிகள் கவனத்தில் எடுத்து கொள்வதுமில்லை என குற்றஞ் சாட்டப் படுகிறது.

இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவுக்கு வந்த நிலையில் அழிவடைந்த இலங்கையின் வடபகுதி மக்களுக்கு 50 ஆயிரம் வீடுகளை அமைத்து கொடுப்பதாக இந்திய அரசாங்கம் அறிவித்தது. இந்த திட்டத்தை வெளிவிவாகார அமைச்சர் எஸ் எம் கிருஸ்ணா யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த போது உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தும் வைத்தார். எனினும் இது பற்றிய கருத்துகளோ முயற்சிகளோ எதுவும் பின்பு இடம்பெறவில்லை. அந்த திட்டம் அடிக்கல் நாட்டு விழாவுடன் மாத்திரமே இருந்து வருகின்றது. இது பற்றி மக்களிடையேயும் அதிருப்தி காணப்படுகின்றது.

ஆயினும் இந்த திட்டம் தொடர்பிலான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து இந்தியா அதிகாரிகளை கொண்ட குழுவொன்று வவுனியாவில் கூடி ஆராய்ந்துள்ளது. வவுனியா அரச அதிபரின் மாவட்ட செயலகத்தில் வடக்கு அரச அதிபர்களுடன் இடம்பெற்ற இக் கலந்தரையாடலின் பிரகாரம் முதலில் ஆயிரம் வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கையின் மேற்கொள்ள முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு இந்திய அரசின் நிதி உதவியில் மேற் கொள்ளப்படவுள்ள வீட்டுத்திட்ட பணிகள் யாழ். மாவட்டத்தில் 7 ஆயிரத்து 400 வீடுகள் கட்டப்படவுள்ளன என யாழ் மாவட்ட அரசாங்க



அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்திருந்தார். மேலும் தற்போது புதிதாக 150 வீடுகளும் புணரமைப்பு என்ற வகையில் 2 ஆயிரம் வீடுகளும் மேலும் புதிதாகக் கட்டிக் கொடுக்கும் வகையில் 5 ஆயிரத்து 250 வீடுகளும் இந்ததிட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்படவுள்ளன. பயனாளிகள் வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள போரினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் இடம் பெயர்ந்தவர்கள் என்ற அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படும் என குறிப்பிட்டார்.

ஆனால் இது பற்றி அறியும் போது ஐக்கிய நாடுகள் சபை இவ் வீட்டுத்திட்டம் தொடர்பாக ஆரம்பிக்கப்படாது உள்ளமை குறித்து கவலை தெரிவித்தமையை அடுத்தே இலங்கைக்கான இந்திய தூதரகம் இத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

இவ் வாறு வீட்டுத்திட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுவதையடுத்து வீடுகள் அமைப்பதற்கு உரிய காணிகளில் கண்ணிவெடிகளை அகற்றி காணிகளை அடையாளப் படுத்தும் முகமாக அப்பகுதியில் உள்ள காடுகளை அகற்றி இவ்வீட்டுத் திட்டத்திற்கான முதற்கட்ட நடவடிக்கைகளுக்கு பிரதேச செயலகங்கள் மற்றும் சம்மந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். எனவும் தெரிவிக்கப பட்டது.

அத்துடன் இவ் வீட்டுத் திட்டத்தினூடாக அமைக்கப்படவுள்ள வீடுகள் அனைத்தும் 520 சதுர அடி கொண்டதாக 10 இலட்சம் ரூபா பெறுமதியில் அமைக்கப்படவுள்ளதாகவும் இப் பகுதிக்கு வீதி நீர் விநியோகம் மின்சாரம் என்பன வழங்குவது தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்குமாறு உரிய திணைக்கள அதிகாரிகளிடம் அரச அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இவ்வாறான வகையில் வீட்டுத்திட்ட பணியானது தாமதமாகிச் செல்கின்றமை தெளிவாக புரிகின்றது

## சாந்தபுர மக்களின் நிலை மாறுமா?

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டி யாழ் (A9 பாதையில்) வீதியில் இரணைமடு சந்தியில் இருந்து அண்ணளவாக 4km தூரத்தில் 630 குடும்பங்களை கொண்ட ஓர் சிறிய கிராமம் அக்கிராம மக்கள் தற்போது பல எதிர்பார்ப்புக்கள் எண்ணங்கள் மனதில் கொண்டபடி வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். வறுமையானவர்கள் வாழும் பூமியாகவே காணப்படுகிறது.

1993 ஆம் ஆண்டு இரணைமடு



குளப்பகுதியில் காணப்படும் அத்துமீறிய குடியிருப்பாளர்களை அகற்ற அப்போதைய நீர்பாசன அதிகாரி இரணைமடு நீர்பாசன மேல் அதிகாரி திரு. இராசேந்திரம் அவர்களுக்கு பணித்ததை அடுத்து அவர் அவர்களுக்கு மாற்று இடம் ஒன்றை பெற அன்றைய நில அளவையாளர் திணைக்கள அதிகாரியாக இருந்த திரு. சுப்பிரமணியத்தின் ஊடாக காலம் சென்ற உதவி அரசாங்க அதிபர் திருமதி இந்துமதி அம்மா தலைமையில் திருவையாறு கிராம அபிவிருத்தி சங்க பணிமனையில் காணிக் கச்சேரி இடம்பெற்றது.

1993ஆம் ஆண்டு 9ஆம் மாதம் சாந்தபுரம் ½ ஏக்கர் திட்டம் அமைக்கப்பட்டது இவர்கள் குடியமர்த்தப்பட்டும் இவர்களை வேதனைகள்விட்டு வைக்கவில்லை.

1996ஆம் ஆண்டு மீண்டும் இவர்கள் சத்ஜய இராணுவ நடவடிக்கை மூலம் இடம்பெயர வைக்கப்பட்டனர். வீடு வாசல் வாழ்ந்து பின் தமது பிரதேசத்தில் 2010இல் மீள குடியமர்ந்தனர். சாந்தபுரம் மக்கள் துயர் விட்டு வைக்கவில்லை தொடர்ந்த வண்ணம் உள்ளது.

2010ஆம் ஆண்டு 5ஆம் திகதி இவர்கள் மீளகுடியமர்த்த நலன்புரி முகாமில் இருந்து ஏற்றி வரப்பட்டு கிளிநொச்சி மத்திய கல்லூரி பாடசாலையிலே பல நாட்கள் தங்க வைக்கப்பட்டனர் பின் சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்துக்கு 01 07 2010 அன்று கொண்டு வரப்பட்டு அங்கு சிறிய காலம் அமர்த்தப்பட்டு பின் 16 09 2010 அன்று அவர்களின் காணிக்களுக்கு செல்ல அனுமதிக கப்பட்டனர்.

குடியமர்த்தப்பட்ட மக்களின் நிலை பற்றி கிராம சேவை உத்தியோகத்தர் திருமதி சுப்பிரமணியம் ஞானேஸ்வரியை கேட்டபோது அங்கு 630 குடும்பங்கள் வாழுகின்றதாகவும் இதில் முதல் கட்டமாக 48 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டதாகவும் பின்னர் 43 குடும்பங்கட்கு வழங்கப்பட்டதாகவும் கூறினார்.

மேலும் அனைவருக்கும் தற்காலிக தகர கொட்டகைகள் வழங்கப்பட்டது ஆகவும் கூறினார். இக் கிராமத்தில் மக்களில் 7பேர் மட்டுமே அரச உத்தியோகத்தில் உள்ளனர். எனவும் பெரும்பான்மையான மக்கள் கூலித் தொழிலையே செய்கின்றனர் எனவும் இதில் 420 பேர் கல்வி கற்கும் மாணவர்கள் எனவும் கூறினார். சன அடர்த்தி கூடிய பிரதேசமாக இருந்தாலும் போதிய வசதிகள் அற்ற நிலையில் அக்கிராமம் உள்ளதாக கூறினார்.

சாந்தபுரம் கிராமவாசியான சொக்கநாதபிள்ளை ரங்கசாமியை அக் கிராமத்தின் நிலை பற்றிக் கேட்ட போது அவர் தலையைச் சாய்ந்து சில நேரம் மௌனித்து பின்னர் சோகங்கள் நிறைந்த முகத்தோடு தனது கிராமத்தை பற்றி கூற ஆரம்பித்தார். தனது குடும்பம் ஒரு வறிய மீனவக் குடும்பம் எனவும் நடைபெற்ற போரில் தனது ஒரு பெண்பிள்ளையை இழந்ததாகவும் அவர் இறந்து போனாரா? அல்லது உயிரோடு உள்ளாரா? என்ற நிலையில் உள்ளதாகவும் இதே நிலையில் மேலும் பல குடும்பங்கள் காணப்படுவதாகவும் கூறினார்.

தாம் அனைவரும் இரணைமடு குளத்தில் மீன் பிடிக்க முடியாத நிலை உள்ளதாக ஆதங்கத்துடன் கூறினார்.

இதுவே தமது பிரதேச பிரதான தொழில் ஆனால் அதை செய்ய முடியாத நிலை காணப்படுவதாகவும் இதனால் தாம் தொழில் இன்றித் தவிப்பதற்காகவும் கூறினார்.

மேலும் இரணைமடு குளத்தில் மீன்பிடி தடை 2010 08 மாதம் எடுப்பதாக ஜனாதிபதி செயலகத்தால் அறிவிக்கப்பட்டதாகவும் மக்கள் சுதந்திரமாக மீன்பிடி செய்வதாகவும் பத்திரிகைகளிலும் வேறு ஊடகங்களிலும் செய்தி வெளியிடப்பட்டதாகவும் ஆனால் தாங்கள் இரணைமடு குளத்துத் தண்ணீரைக்கூட தொட்டுப்பார்க்க முடியவில்லை என வாடிய முகத்துடன் கூறினார்.

அக்கிராமவாசியும் சலூன் உரிமையாளருமான ஆனந்தன் கூறுகையில் இங்க வீதிகள் சீரற்ற நிலையில் காணப்படுவதாகவும். 2000 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட வீட்டுத்திட்ட வீடுகள் போரினால் பாதிக்கப்பட்டு காணப்படுவதாகவும் அதை புனரமைக்க எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் கூறினார்.

சொத்துக்களை எல்லாம் இழந்து இவர்கள் நிர்க்கதி நிலைக்கு தள்ளப்பட்டனர். பின் 2000ஆம் ஆண்டு காலப்பகுதியில் மீளக்குடியமர்த்தப்பட்டு 75 வீட்டுத்திட்டம் ஒன்று கொடுக்கப்பட்டது இது ஊனமுற்றவர் விதவைகள் என இனங்காணப்பட்டு கொடுக்கப்பட்டது. இவர் தமது கிராமத்தை கிராமத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் காலப்பகுதியில் 2008ஆம் ஆண்டு இலங்கையில் பாரிய யுத்தம் ஒன்று தொடர்ந்த வண்ணம் இருந்தது. அந்த யுத்தத்தின் காரணமாக இவர்கள் மீண்டும் இடம்பெயர்ந்து இறுதியில் நலன்புரி முகாம்களில் சொத்துக்களை எல்லாம் இழந்து இவர்கள் நிர்க்கதி நிலைக்கு தள்ளப்பட்டனர். இடம்பெயர்ந்து இறுதியில் நலன்புரி முகாம்களில் சென்று விட்டனர்.

சுதாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவக் போக்குவரத்து பிரச்சனை தீருமா?

தீவகப் பிரதேசத்துக்கு அரச மற்றும் தனியார் பேரூந்துகள் சேவையில் ஈடுபடுகின்றன. அதில் 776,780 இலக்கப் பேரூந்துகளே வேலணைப் பிரதேசத்துக்கு உரியவையாகும். ஊர்காவற்றுறைப் பிரதேசத்திலிருந்து பாடசாலை, அலுவலகங்களுக்கு செல்பவர்கள் பருவகாலச்சீட்டினைப் பெற்றே யாழ்ப்பாணம் சென்று வருகிறார்கள்.

குறிப்பாக மாணவர்கள் காலை 6 மணிக்கு ஊர்காவற்றுறையில் இருந்து புறப்படும் 780 இலக்கப் பேரூந்தில் பயணிக்க வேண்டியுள்ளது. இப்பேரூந்து யாழ்ப் பாணத்தைச் சென்றடைய ஒரு மணி நேரம் தேவைப்படும். மறுபடியும் இப் பாடசாலை மாணவர்கள் திரும்பி வருவதற்கு ஊர்காவற்றுறை (780),குறிகட்டுவான்(776) இலக்கப் பேரூந்துகளே பயன்படும். ஊர்காவற்றுறை மாணவர்கள் 777 (ஊர்காவற்றுறை) இலக்கப் பேரூந்தில் பயணிப்பார்கள். ஆனால் பாடசாலை விட்டு வரும் போது பருவகாலச்சீட்டினைப் பெற்ற மாணவர்கள் வருவதற்கு அரச போக்குவரத்துச் சபைப் பேரூந்து இல்லை. 12.30 க்கு ஊர்காவற்றுறை(780) பேரூந்துக்குப் பின்னர் ஊர்காவற்றுறைக்கு 4 மணிக்கே உள்ளது. 2 மணிக்குப் குறிகாட்டுவான்(776) பேரூந்துக்குப் பின்னர் குறிகாட்டுவானுக்கு 4.15 மணிக்கே



உள்ளது.

இவர்கள் தனியார் பேரூந்துகளில் பயணம் செய்வதானால் ஊர்காவற்றுறை(780), குறிகட்டுவான்(776) பேரூந்துகளில் பிரயாணம் செய்ய வேண்டும். இவர்கள் இவ்வாறு பயணம் செய்வதற்கு பணம் செலுத்தியே செல்ல வேண்டியுள்ளது. தனியார் பேரூந்துகளுக் கிடையே நிலவும் போட்டி காரணமாக மாணவர்களை ஏற்றாமல் செல்லும் நிலைமையும் காணப்படுகிறது.

பாடசாலைச் சீருடையில் மாணவர்கள் வந்தால் பணம் வாங்குவதில்லை என குறிகட்டுவான்(776) பேரூந்தின் தனியார் வாகன உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார். மற்றைய ஒரு நடத்துனர் தெரிவிக்கையில் பணம் வாங்குவதாகக் குறிப்பிட்டார். ஆனால் பணம் வாங்குவதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.



இருப்பினும் குறிகட்டுவான் (776), ஊர்காவற்றுறை(780) தனியார் பேரூந்துகளில் மாணவர் களுக்கு 10ரூபாய் அல்லது 20ரூபாய் தான் பெறுவதாக நடத்துனரும் கொடுப்பதாக மாணவர்களும் தெரிவிக்கின்றனர்.

பாடசாலை மாணவர் களுக்காக குறிப்பிட்ட நேரத்துக்கு பேரூந்து சேவை ஒன்று நடாத்தலாமே என இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர் ஒருவரைக் கேட்ட போது நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு போன்ற தீவுகளுக்குப் போகும் லோஞ்சியை (படகு) இலக்கு வைத்து பேரூந்துச் சேவை நடத்தப்படுவதாகவும் பேரூந்துகளின் பற்றாக்குறையே இதற்கு காரணம் எனவும் தெரிவித்தார்.

மாணவர் ஒருவரின் தாயாரான தேவகுமாரன் நாகறஞ்சினி அவர்கள் தெரிவிக்கையில் "வறியவர்களாகத் தாங்கள் காணப்படுவதால் தமது பிள்ளையின் பாடசாலைப் போக்குவரத்துக்கு பருவகாலச் சீட்டினைப் பெறுவதற்கும் பணம் செலுத்துவதுடன் பிள்ளை திரும்பி வருவதற்கு தனியார் பேரூந்துக்கும் பணம் செலவழிக்க வேண்டி உள்ளதாகவும்" தெரிவித்தார். குறிப்பிட்ட நேரத்துக்கு பேரூந்து ஒன்று விட்டால் அது மிகவும் நல்ல விடயம் எனவும் தெரிவித்தார். தனியார் கல்வி நிறுவனத்தில் பிள்ளை கல்வி கற்க செல்ல முடியாதுள்ளதாகவும் குறிப்பிட்டார்.


இன்னும் ஒரு மாணவி யின் தாயான இளந்திரையன் ஜெயராணி குறிப்பிடுகையில் பேரூந்தின் சீரின்மை காரணமாக தன் பிள்ளை பருவகாலச்சீட்டு பெறுவதில்லை. காலை வேளையில் வரும் பேரூந்தில் தமது பிள்ளை பிரயாணம் செய்தால் யாழ்ப்பாணத்தில் பாடசாலை சேவை பேரூந்திற்காக 45நிமிடத்திற்கு மேல் காத்திருக்க வேண்டும். திரும்பி வரும் போது அரசின் பேரூந்து இல்லை, எனவே தனது பிள்ளையை தனியார் பேரூந்தில் அனுப்புவதாகவும் எமது நாட்டுச் சூழலில் பெண் பிள்ளைகளை பேரூந்து தரிப்பு நிலையத்தில் காத்திருந்தால் இளைஞர்கள் வீண்வம்பு பேசுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள்.


இதனால் தமது பிள்ளையை தனியார் பேரூந்தில் அனுப்புவதாகவும் தெரிவித்தார் மேலும் அவர் தெரிவிக்கையில் காலை வேளையில் வரும் 780 (ஊர்காவற்றுறை) இலக்கப் பேரூந்து 30நிமிடம் தாமதமாக வந்தால் பாடசாலை செல்வதற்கு பிள்ளைகளுக்கு நேரம் சரியாக இருக்கும் எனவும் தெரிவித்தார். தற்போதைய இளைய சமுதாயம் தனியார் பேரூந்தில் போவதையே விரும்புவதாகவும் தெரிவித்தார். இது ஏனெனில் பேரூந்தின் தரம் வேகம் நேரம் தவறாமையே காரணம் எனவும் தெரிவித்தார்.

மாணவனான அம்பிகைபாகன் அகீபனைக் கேட்ட போது பேரூந்துப் பிரச்சனை பற்றி பலதடவைகள் டிப்போவிற்கு (பேரூந்து தரிப்பிடம் - கோண்டாவில்) கடிதம் அனுப்பியும் எதுவித பலனும் இல்லை. தொடந்தும் இப்பிரச்சனை நிலவி வருவதாக தெரிவித்தார். இதனால் மாணவர்கள் மட்டுமன்றி இப்பிரதேச மக்களும் பிரச்சனையை எதிர்நோக்குவதாக தெரிவித்தார்.

நாள் ஒன்றிற்கு இப்பிரதேசத்திற்குரிய தனியார் பேரூந்துகள் (776,780) 28தடவைகள் சேவைகளில் ஈடுபடுகின்றபோதும் அரச பேரூந்துகள் 13தடவைகள் மாத்திரமே சேவைகளில் ஈடுபடுகின்றது. அரச பேரூந்தின் நேர அட்டவணையை பார்க்கும் போது பெரும்பான்மையான பேரூந்துகள் இரண்டு மணித்தியாலத்திற்கு ஒரு தடவையே இடம் பெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.







**மணிக்கூட்டு வீதியில் பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில் உள்ள வீதி இவ்வாறு கவனிப்பராற்று போக்குவரத்துக்கு உகந்ததாக இல்லாமல் காணப்படுகிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org